**இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைகள் (தனியார்) கம்பனி - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைகள் (தனியார்) கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளின் (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRS) இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன்.இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளில் (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRS) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்

பொதுத்துறை தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதனால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்ப்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதியப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயின் அவை தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவில் ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவனத்தினால் பேணுதல் அவசியமானதாகும்.

### 1.5.2 சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளில் (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS)இணக்கமற்றிருத்தல்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சிகளில் (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 17 மற்றும் 18 ஆம் பிரிவுகளுக்கு இணங்க சொத்துக்களின் மிகுதிப் பெறுமதி அல்லது பிரயோசனமான ஆயுட்காலத்தினை ஆகக்குறைந்தது ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்ய வேண்டியதுடன் எதிர்பார்த்த ஆயுட் காலத்திற்கு முன்னர் மதிப்பீட்டினை விட வித்தியாசப்படுமாயின் வினைதிறனான ஆயுட் காலத்தினை மீண்டும் மதிப்பீடு செய்தல் வேண்டும். அதன் போது பெறுமானத் தேய்வு செய்யும் முறைமை மற்றும் பிரயோசனமான ஆயுட்காலம் அதற்கு இணங்க மாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள ரூபா 5,341,525 தொகையான சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் அவை மீண்டும் மீளாய்வு செய்யப்படாது இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | 2025 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களை மீளாய்வு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளில் (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) பிரிவு 17 மற்றும் 18 இன் பிரகாரம் சொத்துக்களின் மிகுதிப் பெறுமதி அல்லது பயன்தரும் ஆயுட்காலம் ஆகக்குறைந்தது ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவில் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளில் (SMEs) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS) 21.15 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்களை தீர்த்துவைக்கும் போது நிறுவனத்தின் வளங்கள் வெளியே வெளிச்செல்லும் இயலுமையுள்ள பொறுப்புக்கள் சம்பந்தமாக நிறுவனத்தினால் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் மற்றும் ஒதுக்கீடு செய்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் துறைமுங்கள் முகாமைத்துவ ஆலோசனை சேவை கம்பனியின் மூலம் துறைமுகங்கள் அதிகாரசபையின் போக்குவரத்து தேவைப்பாட்டிற்காக 2004 ஆம் ஆண்டின் போது Tangyo Haulage தனியார் கம்பனியிடமிருந்து 14 போக்குவரத்து வாகனங்கள் உடன்படிக்கையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது அதிகாரசபையின் மூலம் நிறுத்தப்பட்டதன் காரணமாக வழங்குனர் கம்பனி சட்ட நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதற்காக ரூபா 28.9 மில்லியன் இழப்பீட்டுப் பணத்தை வழங்குனருக்குச் செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது. எனினும் இழப்பீட்டுப் பணத்திற்காக | துறைமுகங்கள் அதிகார சபைக்குத் தேவையான ஆலோசனை சேவைகளை வழங்குதல் இக்கம்பனியின் அடிப்படை குறிக்கோளாக இருந்ததனால் அதற்கிணங்க மேற்கூறிய சேவை வழங்கப்பட்டுள்ளதுடன் இச்சேவையை நிறுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய சட்டப் பிரச்சினை சம்பந்தமாக கணக்குகளில் நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் 22.2 ஆம் பிரிவின் 2 ஆம் அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ளது. | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் (SLFRS) 21.15 ஆம் பிரிவிற்கு இணங்க பொறுப்புக்களை தீர்த்துவைக்கும் போது நிறுவனத்தின் வளங்கள் வெளியே வெளிச்செல்லும் இயலுமை உள்ள பொறுப்புக்கள் சம்பந்தமாக நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் மற்றும் ஒதுக்கீடுகள் செய்யப்படுதல் வேண்டும். |

நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடு செய்தலும் செய்யப்பட்டிருக்காததுடன் நீதிமன்ற தீர்ப்பினை மேன்முறையீடு செய்வதற்காக ரூபா 2.5 மில்லியனை செலுத்துவதற்கு சட்டத்தரணிகள் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குத் தேவையான பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கை களின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 135,946,028 | 91,428,528 | 44,517,500 | கம்பனியால் 2023 ஆம் ஆண்டிற்காக துறைமுகத்திற்கு வழங்கப்பட்டுள்ள சேவைகளுக்காக வழங்கிய இன்வொயிசின் பிரகாரமான மீதியானது இதில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த மீதிகளை உறுப்படுத்தி தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் துறைமுக கிளைக்கும் கப்பல் கூட்டுத்தாபனத்தின் தேசிய கணக்காய்வு கிளைக்கும் பிரதிடப்பட்டு 2024 சனவரி 03 ஆந் திகதி துறைமுக அதிகாரசபையின் நிதிப் பணிப்பாளருக்கு மின் அஞ்சலின் மூலம் தகவல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | துறைமுக அதிகார சபையுடன் கலந்துரையாடல் ரீதியான நடவடிக்கை எடுத்து மீதிகளை ஒப்பீடு செய்து சரியான மீதிகளை கணக்கீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 11,993,878 | 5,955,164 | 6,038,714 | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| துறைமுக அதிகார சபையின் மெகலம் கேட் வளவில் உணவகத்தை செயற்படுத்துவதற்காக 2018 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து 2023 சனவரி 31 ஆந் தகிதி வரையான 05 ஆண்டுகளுக்காக மூன்றாந் தரப்புடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஏப்ரல் மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை அத்தரப்பினரால் கம்பனிக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணமான ரூபா 4,477,679 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய ஆதனம் குத்தகை உடன்படிக்கையின் மூலம் சட்டரீதியாக துறைமுக அதிகார சபையிடமிருந்து பொறுப்பேற்கப்படாது இந்த வளவு மீண்டும் மூன்றாந் தரப்பினருக்கு உப குத்தகை வழங்குவதற்காக 2023 மார்ச் 01 ஆந் திகதி உடனபடிக்கை செய்யப்பட்டிருந்தது. எனவே உடன்படிக்கையில் சட்டரீதியான தன்மை இல்லாததன் காரணமாக கம்பனி உழைக்க கூடியதாக இருந்த வருமானம் மீளாய்வாண்டில் இழக்கப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | உரிய அறவிட வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 131(1) ஆம் உபபிரிவு | ஒரு கம்பனியால் ஆண்டறிக்கையானது ஆகக் குறைந்தது ஒவ்வொரு ஆண்டுக்கு ஒரு தடவை நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் கம்பனிகள் பதிவாளருக்கு ஒப்படைக்க வேண்டிய போதிலும் இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைக் கம்பனியால் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் வருடாந்தம் | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | கம்பனிகள் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. கம்பனியால் கம்பனிகள் அதிகாரசட்டத்தின் 131(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க தவறிய சந்தர்ப்பத்தில் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 131(4)(அ),(ஆ) உபபிரிவுகளுக்கு இணங்க கம்பனி குற்றவாளியாவதுடன் செய்யத்தவறிய கம்பனியின் ஒவ்வொரு உத்தியோகத்தரும் அது சம்பந்தமாக குற்றவாளியாவார்கள் எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் அது சம்பந்தமாக கவனம் செலுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 223(ஈ) (i) மற்றும் (ii) ஆம் உபபிரிவுகள் | கம்பனியின் ஒரு பணிப்பாளரோ அல்லது செயலாளரோ நியமிக்கப்படவில்லையாயின் இராஜினாமாச் செய்யும் வித்தியாசம் இடம்பெறுகையில் அந்த வித்தியாசம் தொடர்பாக முதலாவதாக கம்பனி தெரிந்து கொண்டதன் பின்னர் வேலை செய்யும் இருபது நாட்களுக்குள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளருக்கு அனுப்பிவைப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பணிப்பாளர் சபை தொடர்பான 38 வித்தியாசங்கள் இடம்பெற்றுள்ளது என அவதானிக்கப்பட்டதுடன் கம்பனியால் கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. இதனை 2024 ஆம் ஆண்டின் போது சரி செய்து அனைத்து அறிக்கைகளையும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவுசெய்து நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | கம்பனிகள் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்ட ஏற்பாட்டின் பிரகாரம் பணிப்பாளர் சபையில் இடம்பெறுகின்ற மாற்றங்கள் கம்பனிகள் பதிவாளருக்கு தெரியப்படுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,410,435 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 7,125,632 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,715,197 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. வேலையாட்களை கூலிக்கு வழங்கும் சேவையின் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 26,606,522 ஆல் அதாவது 78 சதவீத்தால் குறைவடைதல் மற்றும் ஏனைய வருமானங்களிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 1,519,108 ஆல் அதாவது 72 சதவீத்தால் வீழ்ச்சியடைதல் இப்பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

2024 ஆம் ஆண்டின் போது சட்ட மற்றும் தொழில்சார் கட்டண செலவுகள் ரூபா 2,851,679 ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் அது ரூபா 5,155,587 ஆகும். அதன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 2,303,908 ஆல் அதாவது 81 சதவீத்தால் சட்ட மற்றும் தொழில்சார் கட்டண செலவு அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நடைமுறை ஆண்டில் 04 நடைமுறை கணக்குகளில் ரூபா 34.9 மில்லியன் தொகை நிறுத்திவைக்கபட்டிருந்ததுடன் மேற்கூறிய பணத்தை வினைத்திறனாக முதலீட்டு நடவடிக்கையில் ஈடுபடுத்தி அல்லது நிலைான வைப்புக்களில் வைப்புச் செய்து வட்டி வருமானத்தினை உழைப்பதற்கு கம்பனியின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடந்த சில ஆண்டுகளில் கம்பனியின் பணிப்பாளர் சபை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்தல் முறைப்படியாக இடம்பெற்றிருக்காததனால் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை (Form 20, Form 15) வங்கிக்கு வழங்க முடியாதிருந்தது. அதனால் கம்பனியின் அதிகாரம் பெற்ற கையொப்பமிடுபவர்களின் கையொப்பம் அல்லது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினை ஏற்றுக்கொள்வதற்கு வங்கி இணங்கிக் கொண்டிருக்காததனால் 2023 மார்ச் மாத்திலிருந்து 2024 மார்ச் மாதம் வரையான காலத்தில் அதன் பணத்தை முதலீடு செய்வதற்கான இயலுமை இருக்கவில்லை. எனினும் 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதன் சிக்கல் முடிவடைந்துள்ளதனால் வங்கி அப்பணத்தை முறைப்படியாக தற் பொழுது முகாமைத்துவம் செய்து வருகின்றது. | பணத்தை வினைத்திறனாக முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அல்லது நிலையான வைப்புக்களில் ஈடுபடுத்தி வட்டி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கடந்த 05 ஆண்டுகளில் 2019-2023 காலிமுகத்திடல் மைதானத்தை நிருவகிப்பதன் வருமானம் செலவுகளை பரீட்சித்த போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஆண்டில் வருமானத்தை மிகைத்த செலவு 548 சதவீதமாக இருந்தது. | 2022 நவம்பர் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் ஏற்படுத்திக் கொண்ட கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் வருமானத்தின் மீது 20 சதவீத முகாமைத்துவ கட்டணம் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக ரூபா 4,044,199 செலுத்தப்பட்டிருந்தது. அது ஒரு நேரடி செலவாக அடையாளங் காணப்பட்டுள்ளதனால் காலி முகத்திடலின் செயற்பாட்டு நட்டம் அதிகரிப்பதனைப் போல கம்பனியின் ஒட்டுமொத்த இலாபம் குறைவடைவதற்கு அது தாக்கமளிதம்துள்ளது. | செயற்பாட்டு நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொண்டு இலாபத்தினை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியால் இலங்கை துறைமுக அதிகார சபையின் 22,456 சதுர அடி பரப்பளவுள்ள குத்தகை ஆதனம் வருடாந்தம் ரூபா 459,857 தொகைக்கு பெறுகை நடைமுறைகள் இன்றியும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதும் 2014 ஆம் ஆண்டிலிருந்து ஒரே நபருக்கு வழங்கப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக உடன்படிக்கை செய்துகொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கொடுப்பனவிற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | கம்பனியின் மனித வளங்களை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டியதுடன் தேவையற்ற செலவுகளைக் குறைத்தல் வேண்டும். |

### 3.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மனித வளங்கள் முகாமைத்துவ சிக்கல் மற்றும் தீர்த்துவைக்கும் குறிக்கோளில் மீளாய்வாண்டில் ரூபா 1,682,143 படியாகச் செலுத்தி இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்கு எதாவது கடமையை ஒப்படைத்தல், உரிய காலத்தில் மேற்பார்வை செய்தல், நிறைவேற்றிய செயற்பாடுகள் என்பன தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. கம்பனியின் | உரிய கொடுப்பனவிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | கம்பனியின் மனித வளங்களை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டியதுடன் தேவையற்ற செலவுகளை குறைத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கூறிய வழக்கு நடவடிக்கைகளுக்காக வெளித்தரப்பினருக்கு 14 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,310,032 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) நிதி அமைச்சின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய் 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கையேடு | | |
| (i) 3.1(i) ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கம்பனியின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கைக்காக பொதுத் திறைசேரியின் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியின் ஊழியர் எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 3.2 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் கம்பனியின் ஆளணியினருக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து அதற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரமும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றிக்கையின் பிரகாரம் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து வரிசை அமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| நிதி அமைச்சின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முநற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டுடன் முடிவுறுத்தப்பட்ட தந்திரோபாயத் திட்டம் உரிய வரிசை அமைச்சின் செயலாளரினூடாக பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனி 2023 ஆம் ஆண்டு தொடர்பான செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து சமர்ப்பித்திருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. எதிரகாலத்தில் தயாரித்து பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டுடன் முடிவுறுத்தப்பட்ட தந்திரோபாயத் திட்டத்தினை உரிய வரிசை அமைச்சு செயலாளரினூடாக பணிப்பாளர் நாயகம் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |